**CC.No.435/2022 (JM.No.II,  DHARMAPURI.)**

**05.08.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

**(A1 , A2 ஆஜர்,  A3 ஆஜர் இல்லை )**

**PW34:திரு.ராஜா த/பெ.சாமிநாதன்**

**முதல் விசாரணையின் தொடர்ச்சி**

**மோசடி இனம்-2**

**உண்மையான அடமான நகைகளை அபகரித்து போலி நகைகள் ஈடு வைத்து கையாடல்**

**2. அடமான நகைகள் கையாடல் ரூ.30,750/-**

05.02.2013 அன்று நகைகடன் எண். 5951 ன் படி திருமதி. ஜெயசித்ரா என்பவரிடம் W கொக்கி கட்டிங் மாடல் செயின் -1 மொத்த எடை 12.300 கிராம் அடமானம் பெறப்பட்டு அதன் ஈடுபேரில் ரூ.17,000/- கடன் வழங்கப்பட்டுள்ளது. நகைகடன் வழங்கியதற்கு அத்தாச்சியாக நகைகடன் பேரேடு பக்கம் 334/6 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடன் எண். 5629-6017 வரையுள்ள நகைகடன் பேரேடு 6-ல் பக்கம் 334 ஏற்கனவே அ.சா.ஆ.61 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நாள்வழி பேரேடு பக்கம் 78/3 ல் இவருக்கு நகைகடன் வழங்கியதற்கு ரூ.17,000/- கையிருப்பு குறைக்கபட்டுள்ளது. **01.12.2012 முதல் 29.06.2013 வரையுள்ள நாள் வழிபேரேடு 3 ல் பக்கம்எண். 78 ல் ரூ.17,000/- அ.சா.ஆ.267** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடன் தொகை வழங்கியதற்கு அத்தாச்சியாக பற்று சீட்டில் கடன்தாரர் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. அந்த பற்று சீட்டு ஏற்கனவே அ.சா.ஆ.62 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடன் தொகையை அனுமதித்து கு.இ.1 செயலர், கு.இ.2 முதுநிலை எழுத்தர்/காசாளர் ஆகிய இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நாள்வழி பேரேட்டினை எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் திரு.என்.முருகன் எழுதி இவர் மற்றும் சங்க செயலர் திருமதி.டி.ஜெயந்தி இருவரும் கையொப்பமிட்டுள்ளனர். நகைகடன் பதிவேட்டில் நகைகள் ஈடு வைத்ததற்கு அத்தாச்சியாக கடன்தாரர் திருமதி.ஜெயசித்ரா கையொப்பம் பெறப்பட்டுள்ளது. நகைகள் பாதுகாப்பில் உள்ளது என எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் ஆகிய இருவரும் நகைகடன் பதிவேட்டில் கையொப்பம் இட்டுள்ளார்கள். 09.10.2013 அன்று சங்க தலைவர், சரக மேற்பார்வையாளர், சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது திருமதி.ஜெயசித்ரா

என்பவரிடம் பெறப்பட்ட அடமான நகை W கொக்கி கட்டிங் மாடல் செயின் போலி என்பதையும், நகை மதிப்பீட்டாளரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இந்த போலி நகை என்னால் கைபற்றப்பட்டது. கடன்தாரர் திருமதி. ஜெயசித்ரா என்பவரை விசாரித்ததில் இவரது 22.11.2013 ம் தேதிய வாக்குமூலத்தில் இவர் நகைகடன் எண். 5951 ன் படி W கொக்கி கட்டிங் மாடல் செயின் -1 அடமானம் பேரில் ரூ.17,000/- கடன் பெற்றதாகவும், இந்த நகைகளை இன்னும் இவர் மீட்கவில்லை என்றும், இது இவருடைய நகைகள் தான் என்றும், நகை கடன் வைத்ததற்கு அத்தாச்சியான நகை கடன் பதிவேட்டிலும், கடன் தொகை பெற்றதற்கு அத்தாச்சியாக நகைகடன் பற்று சீட்டிலும் கையொப்பமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். **ஜெயசித்ரா கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.268** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சங்க செயலர் திருமதி.டி.ஜெயந்தி மற்றும் எழுத்தர் / முதுநிலை எழுத்தர் / காசாளர் திரு.என். முருகன் ஆகியோரை 12.12.2013 ம் தேதியும், நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமிஆச்சாரி என்பவரை 20.12.2013 ம் தேதியும் விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளேன். விசாரணையில் திருமதி ஜெயசித்ரா என்பவரிடம் பெறப்பட்ட உண்மையான அடமான நகைகளை மாற்றிவிட்டு போலி நகைகளை வைத்துள்ளதாக இவர்கள் மூவரும் வாக்குமூலம் அளித்துள்ளார்கள். இதிலிருந்து இவர்கள் மூவருக்கும் வழங்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் மற்றும் நம்பிக்கை மோசடி செய்து மேற்படி கடன்தாரரின் W கொக்கி கட்டிங் மாடல் செயின்-1 யை அபகரித்து அதற்கு ஈடாக போலி நகைகள் வைத்து உண்மையான அடமான நகைகளை கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது. இதன் மார்கெட் மதிப்பு நகைகடன் பேரேட்டின் படி ரூ.30,750/- ஆகும்.

### 3. அடமான நகைகள் கையாடல் ரூ.55,720/-

30.03.2013 அன்று நகைகடன் எண். 6006 ன் படி திரு. பெரியதம்பி என்பவரிடம் O கொக்கி கட்டிங் மாடல் செயின் -1 மொத்த எடை 19.900 கிராம் அடமானம் பெறப்பட்டு அதன் ஈடுபேரில் ரூ.31,600/- கடன் வழங்கப்பட்டுள்ளது. நகைகடன் வழங்கியதற்கு அத்தாச்சியாக நகைகடன் பேரேடு பக்கம் 389/6 ல் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடன் எண். 5629-6017 வரையுள்ள நகைகடன் பேரேடு 6-ல் பக்கம் 389 ஏற்கனவே அ.சா.ஆ.59 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. நாள்வழி பேரேடு பக்கம் 153/3 ல் இவருக்கு நகைகடன் வழங்கியதற்கு ரூ.31,600/- கையிருப்பு குறைக்கபட்டுள்ளது. **01.12.2012 முதல் 29.06.2013 வரையுள்ள நாள் வழிபேரேடு 3 ல் பக்கம்எண். 153 ல் ரூ.31,600/- அ.சா.ஆ.269** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடன் தொகை வழங்கியதற்கு அத்தாச்சியாக பற்று சீட்டில் கடன்தாரர் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. அந்த பற்று சீட்டு ஏற்கனவே அ.சா.ஆ.60 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. கடன் தொகையை அனுமதித்து கு.இ.2 முதுநிலை எழுத்தர்/காசாளர் என்பவர் கையொப்பமிட்டுள்ளார். நாள்வழி பேரேட்டினை

எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் திரு.என்.முருகன் எழுதி கையொப்பமிட்டுள்ளார். நகைகடன் பதிவேட்டில் நகைகள் ஈடு வைத்ததற்கு அத்தாச்சியாக கடன்தாரர் திரு.பெரியதம்பி கையொப்பம் பெறப்பட்டுள்ளது. நகைகடன் விண்ணப்பம் பூர்த்தி செய்யப்படவில்லை. அந்த **பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பம் அ.சாஆ.270 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நகைகடன் விண்ணப்பத்தில் திரு.பெரியதம்பியிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. நகைகடன் விண்ணப்பத்தில் நகைகளுக்கு பொறுப்பான செயலர், முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் எவரும் கையொப்பமிடவில்லை. நகைகள் பாதுகாப்பில் உள்ளது என எழுத்தர்/முதுநிலை எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் ஆகிய இருவரும் நகைகடன் பதிவேட்டில் கையொப்பம் இட்டுள்ளார்கள். 09.10.2013 அன்று சங்க தலைவர், சரக மேற்பார்வையாளர் அரூர், சங்க பணியாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவீதம் இருப்பு பரிசோதனை செய்த போது திரு.பெரியதம்பி என்பவரிடம் பெறப்பட்ட அடமான நகை O கொக்கி கட்டிங் மாடல் செயின்-1 போலி என்பதையும், நகை மதிப்பீட்டாளரால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது. இந்த போலி நகை என்னால் கைபற்றப்பட்டது. கடன்தாரர் திரு. பெரியதம்பி என்பவரை விசாரித்ததில் இவரது 22.11.2013 ம் தேதிய வாக்குமூலத்தில் இவர் நகைகடன் எண். 6006 ன் படி O கொக்கி கட்டிங் மாடல் செயின் -1 அடமானம் பேரில் ரூ.31,600/- கடன் பெற்றதாகவும், இந்த நகைகளை இன்னும் இவர் மீட்கவில்லை என்றும், இது இவருடைய நகைகள் தான் என்றும், நகை கடன் வைத்ததற்கு அத்தாச்சியான நகை கடன் பதிவேட்டிலும், கடன் தொகை பெற்றதற்கு அத்தாச்சியாக நகைகடன் பற்று சீட்டிலும் கையொப்பமிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். **பெரியதம்பி கொடுத்த வாக்குமூலம் அ.சா.ஆ.271** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

சங்க செயலர் திருமதி.டி.ஜெயந்தி மற்றும் எழுத்தர் / முதுநிலை எழுத்தர் / காசாளர் திரு.என். முருகன் ஆகியோர்களை 12.12.2013 ம் தேதியும், நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமிஆச்சாரி என்பவரை 20.12.2013 ம் தேதியும் விசாரித்து வாக்குமூலம் பெற்றுள்ளேன். விசாரணையில் திரு. பெரியதம்பி என்பவரிடம் பெறப்பட்ட உண்மையான அடமான நகைகளை மாற்றிவிட்டு போலி நகைகளை வைத்துள்ளதாக இவர்கள் மூவரும் வாக்குமூலம் அளித்துள்ளார்கள். இதிலிருந்து இவர்கள் மூவருக்கும் வழங்கப்பட்ட அதிகாரத்தை துஷ்பிரயோகம் மற்றும் நம்பிக்கை மோசடி செய்து மேற்படி கடன்தாரரின் O கொக்கி கட்டிங் மாடல் செயின்-1 யை அபகரித்து அதற்கு ஈடாக போலி நகைகள் வைத்து உண்மையான அடமான நகைகளை கையாடல் செய்துள்ளது விசாரணையில் ஊர்ஜிதமாகிறது. இதன் மார்கெட் மதிப்பு நகைகடன் பேரேட்டின் படி ரூ.55,720/- ஆகும்.

1) பொன்னேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க துணை விதி எண் 38(4) ன் படி கையிருப்பு பணம், அடமான நகைகள், சரக்கு இருப்பு உட்பட்ட விலை மதிப்புள்ள பொருட்கள் உள்ளிட்ட சங்கத்தின் எல்லா சொத்துக்களும் செயலரின் பொறுப்பில் இருந்து வரவேண்டும். அவைகளின் பாதுகாப்பிற்கு அவரே பொறுப்பாவார். சங்க துணை விதி எண்.44(1) ன் படி நகைகளின் ஈட்டு பேரில் கோரும் கடன்களை அனுமதிக்கும் அதிகாரம் செயலருக்கு வழங்கப்பட்டுள்ளது. துணைவிதி புத்தகம் ஏற்கனவே அ.சா.ஆ.106 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சங்க தீர்மான எண். 08, நாள்.28.01.2009 ன் படி (தொகுதி –1 பக்கம் 254 முதல் 264 முடிய ஏற்கனவே அ.சா.ஆ.107 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது, தொகுதி –2 பக்கம் 01 முதல் 40 முடிய) சங்க தீர்மான புத்தகம் 15.09.2009 முதல் 22.03.2012 வரை உள்ளதில் பக்கம் 01 முதல் 40 வரை ஏற்கனவே அ.சா.ஆ.260 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. சங்க செயலர் திருமதி. ஜெயந்தி மற்றும் சங்க முதுநிலை எழுத்தர்/ காசாளர், திரு.என். முருகன் ஆகிய இருவருக்கும் பொறுப்புகளும், கடமைகளும் நிர்ணயிக்கபட்டுள்ளது. 28.01.2009 ம் தேதிய தீர்மான எண். 08, வரிசை எண்.16, 20, 40 ஆகியவைகளின் படி இரசீது புத்தகம், செலவு சீட்டுகள் அனுமதித்தல், நாள்வழிப்பேரேடு, ரொக்க சிட்டா சரிபார்த்து கையொப்பமிடுதல், ஆஸ்திகளை பாதுகாத்தல், வரிசை எண்.64, 71 ஆகியவைகளின் படி நகை கடன் வழங்குதல், அடமான நகைகளை பாதுகாத்தல், விதிமுறைகளை கடைபிடித்தல், ஈடு பெறப்படும் நகைகளை முதுநிலை எழுத்தர்/ காசாளர் கூட்டாக பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து பாதுகாத்தல் ஆகியவைகள் சங்க செயலர் திருமதி.டி.ஜெயந்தி என்பவருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 28.01.2009 ம் தேதிய தீர்மான எண்.08, வரிசை எண். 09 ன்படி நாள்வழிபேரேட்டினை எழுதுதல், வரிசைஎண். 14 ன் படி ரொக்க பெட்டகத்தின் சாவிகளை செயலருடன் கூட்டு பொறுப்பில் வைத்திருத்தல், வரிசை எண். 16 ன் படி ரொக்க சிட்டாவினை தினசரி முடிவுகட்டி ரொக்கம் பராமரித்தல், ரொக்க கையிருப்பை கூட்டாக செயலருடன் பாதுகாத்து, பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்தல் மற்றும் ஆளுகை செய்தல், வரிசைஎண்.18 ன் படி நகைகடன் வழங்குதல், ஈடுபெறும் நகைகளை பாதுகாத்தல், பாதுகாப்பு பெட்டக சாவியை செயலருடன் கூட்டாக வைத்திருத்தல், வரிசை எண். 22 ன் படி ரொக்க வரவுகளை பெற்று செயலருடன் கூட்டாக கையொப்பமிட்டு இரசீது வழங்குதல் ஆகிய பொறுப்புகள் எழுத்தர்/காசாளர் திரு.என்.முருகன் என்பவருக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நகை கடன் வழங்குவதில் முறைகேடுகள் ஏதேனும் ஏற்படின் செயலர், எழுத்தர்/காசாளர் மற்றும் நகை மதிப்பீட்டாளர் திரு.சி. சாமி ஆச்சாரி ஆகிய மூவரும் கூட்டு பொறுப்பாவார்கள். பொது மக்களிடன் நகைகளை பெற்ற நகை மதிப்பீட்டாளர் மதிப்பீடு செய்யும் தொகைக்கு நகையின் சுத்த தன்மை அடிப்படையில் கடன் வழங்குதல், தேவையான ஆவணங்களை பெறுதல், அடமான நகைகளை பாதுகாத்தல், வாய்தா தேதியில் கடன் தொகையை வட்டியுடன் வசூல் செய்து அடமான நகைகளை திருப்பி கொடுத்தல், பாதுகாப்பு பெட்ட சாவியை கூட்டாக வைத்திருத்தல் ஆகிய

பொறுப்புகளை கு.இ.(1) செயலர் மற்றும் கு.இ(2) முதுநிலை எழுத்தர்/ காசாளர் இருவரும் கூட்டாக மேற்கொண்டு வந்துள்ளனர். திரு.சி. சாமி ஆச்சாரி சங்கத்தில் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வந்துள்ளார். இவர் அடமான நகைகளின் சுத்த தன்மையினை பரிசோதனை செய்து மதிப்பீடு செய்தல், கடன் தொகையை பரிந்துரைத்தல் தொடர்புடைய ஆவணங்களில் கையொப்பமிடுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

2) சங்க செயலர் கு.இ(1) திருமதி.டி.ஜெயந்தி என்பவரை மேற் தெரிவித்த கையாடல் குறித்து விசாரித்ததில் இவரது 12.12.2013 ம் தேதிய வாக்குமூலத்தில் இவர் 14.07.2010 முதல் இச்சங்கத்தில் செயலாளராக பணியாற்றி வந்ததாகவும், தருமபுரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தீர்த்தமலை கிளையில் சங்கத்தின் பெயரில் உள்ள நகை காசு கடன் உட்பட அனைத்து கணக்குகளிலும் தனி அலுவலர், நிர்வாக பொறுப்பு காலத்தில் இவரும், தனி அலுவலரும், தலைவர் நிர்வாக பொறுப்பு காலத்தில் இவரும், தலைவரும் வரவு, செலவு செய்து வந்ததாகவும், சங்க துணை விதி எண். 38 ன் படி சம்பளம் பெறும் செயலாளராகிய இவருக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதையும், துணைவிதி எண். 38(4) ன் படி கையிருப்பு பணம், அடமான நகைகள் மற்றும் சரக்கிருப்பு உட்பட்ட விலைமதிப்புள்ள பொருட்கள் உள்ளிட்ட சங்கத்தின் எல்லா சொத்துக்களும் செயலாளரின் பொறுப்பில் இருந்து வரவேண்டும் என்பதையும், அவைகளின் பாதுகாப்பிற்கு இவரே முழு பொறுப்பு என்பதையும், துணை விதி எண். 43(அ)(2)(ஈ) ன் படி தங்க நகைகள், தங்க கட்டி அடமானம் பேரில் தேவையான ஆவணங்களை பெற்று கடன் வழங்கலாம் என்று உள்ளதையும் நன்கு அறிவேன் என்றும், சங்க தீர்மான எண். 08, நாள்.28.01.2009 ன் படி செயலர் ஆகிய இவருக்கு கடமைகளும்,பொறுப்புகளும் நிர்ணயிக்கபட்டுள்ளது என்றும், இதன்படி நகைகள் அடமானம் பேரில் கடன் வழங்க தேவையான ஆவணங்களை பெற்று நகை மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யும் தொகைக்கு கடன் வழங்குதல், பாதுகாத்தல், பாதுகாப்பு பெட்டக சாவிகளை கூட்டாக வைத்திருத்தல் ஆகிய பணிகளை முதுநிலை எழுத்தர்/காசாளர் திரு.என்.முருகன் என்பவருடன் கூட்டாக மேற்கொண்டு வந்துள்ளதாகவும், மேலே தெரிவித்த திருமதி. பத்மினி, திருமதி. ஜெயசித்ரா மற்றும் திரு.பெரியதம்பி ஆகியோர்களிடம் நகைகள் பெற்று ரூ. 1,38,800/– கடன் வழங்கயிதாகவும், இந்த நகைகள் உண்மையான நகைகள் என்றும், இவர் மற்றும் முதுநிலை எழுத்தர்/காசாளர் பாதுகாப்பில் இருந்து வந்தது என்றும், இந்த நகைகளை மாற்றிவிட்டு போலி நகைகளை தயார் செய்து உண்மையான அடமான நகைகளை அபகரித்து இவர், முதுநிலை எழுத்தர்/காசாளர் திரு.என். முருகன் மற்றும் நகைமதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி மூவரும் கையாடல் செய்துள்ளதாகவும், இக்கடன்களுக்கான தொகைகள்முழுமையாக சங்கத்தில் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

3) சங்க முதுநிலை எழுத்தர்/காசாளர் கு.இ(2) திரு.என்.முருகன் என்பவரை இக்கையாடல் குறித்து விசாரித்ததில் இவரது 12.12.2013 ம் தேதிய வாக்குமூலத்தில் இவர் 01.11.1993 முதல் 28.02.2013 முடிய எழுத்தராகவும், 01.03.2013 முதல் முதுநிலை எழுத்தர்/காசாளராகவும் பணியாற்றி வந்தததாகவும், சங்கத்தின் ரொக்க கையிருப்பிற்கு இவர் மற்றும் செயலர் திருமதி.ஜெயந்தி ஆகிய இருவரும் கூட்டு பொறுப்பு என்றும், சங்க தீர்மான எண். 08, நாள். 28.01.2009 ன் படி இவருக்கு கடமைகள் மற்றும் பொறுப்புகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், இதன்படி நகை கடன் வழங்குதல், தேவையான ஆவணங்களை பெறுதல், அடமான நகைகளை பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்து பாதுகாத்தல், பாதுகாப்பு பெட்டக சாவியை கூட்டாக வைத்திருத்தல் ஆகிய பொறுப்புகளை செயலர் திருமதி.ஜெயந்தி என்பவருடன் கூட்டாக மேற்கொண்டு வந்தததாகவும், நகை மதிப்பிட்டாளராக திரு.சி.சாமி ஆச்சாரி என்பவர் பொறுப்பில் இருந்ததாகவும், மேலே தெரிவித்த திருமதி. பத்மினி, திருமதி. ஜெயசித்ரா மற்றும் திரு.பெரியதம்பி ஆகியோர்களிடம் நகைகள் பெற்று ரூ.1,38,800/- கடன் வழங்கியதாகவும், இந்த நகைகள் உண்மையான நகைகள் என்றும், இவர் மற்றும் செயலர் பாதுகாப்பில் இருந்து வந்தது என்றும், இந்த நகைகளை மாற்றிவிட்டு போலி நகைகளை தயார் செய்து உண்மையான அடமான நகைகளை அபகரித்து இவர், செயலர் திருமதி.டி.ஜெயந்தி மற்றும் நகைமதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி மூவரும் கையாடல் செய்துள்ளதாகவும், இக்கடன்களுக்கான தொகைகளை முழுமையாக சங்கத்தில் செலுத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

4) சங்க நகை மதிப்பீட்டாளர் கு.இ(3) திரு.சி.சாமி ஆச்சாரி என்பவரை இக்கையாடல் குறித்து விசாரித்ததில் இவரது 20.12.2013 ம் தேதிய வாக்குமூலத்தில் இவர் 16.09.2009 முதல் நகை மதிப்பீட்டாளராக பணிபுரிந்து வந்ததாகவும், கடன் தாரர்களிடம் அடமான நகைகளை பெற்று அவைகளின் சுத்த தன்மைகளை பரிசோதனை செய்து ஒரு கிராமிற்கு வழங்க நிர்ணயித்த தொகைக்கு மிகாமல் கடன் வழங்க பரிந்துரை செய்ததாகவும், நகைகடன் பதிவேடு, நகைகடன் விண்ணப்பம் மற்றும் நகைகடன் அட்டைகளில் நகைகளின் மொத்த எடை, நிகர எடை மற்றும் கடன் வழங்க பரிந்துரை செய்யும் தொகை ஆகியவைகளை பதிந்து இவரும், கடன்தாரரும் கையொப்பமிட்டு நகைப்பொறுப்பாளர்கள் செயலர் திருமதி.டி.ஜெயந்தி மற்றும் முதுநிலை எழுத்தர்/காசாளர் திரு.என்.முருகன் ஆகியோரிடம் கொடுப்பதாகவும், அந்த நகைகள் ஈடு பேரில் மேற்கண்ட இருவரும் கடன் வழங்கியதாகவும், அடமானம் பெறும் நகைகளின் போலி நகைகள் இருந்தாலும், உண்மையான நகைகளை எடுத்துவிட்டு போலி நகைகள் தயார் செய்து நகை கடன் வழங்கயிருந்தாலும், நகை இல்லாமல் நகை கடன் வழங்கியிருந்தாலும், இவர், செயலர் திருமதி.டி.ஜெயந்தி மற்றும் முதுநிலை எழுத்தர்/காசாளர் திரு. என்.முருகன் ஆகிய மூவரும் கூட்டு பொறுப்பு ஆவோம் என்றும், மேலே தெரிவித்த திருமதி. பத்மினி, திருமதி. ஜெயசித்ரா மற்றும் திரு.பெரியதம்பி ஆகியோர்களிடம் நகைகள் பெற்று மதிப்பீடு செய்து கடன் வழங்க பரிந்துரை செய்ததாகவும், இந்த

நகைகள் உண்மையானது என்றும், செயலர் மற்றும் முதுநிலை எழுத்தர் / காசாளர் பாதுகாப்பில் இருந்து வந்ததாகவும், இந்த நகைகளை மாற்றிவிட்டு போலி நகைகள் தயார் செய்து உண்மையான அடமான நகைகளை அபகரித்து இவர் , செயலர் திருமதி.ஜெயந்தி, முதுநிலை எழுத்தர் / காசாளர் திரு.முருகன் மூவரும் கையாடல் செய்துள்ளதை தெரிவித்துள்ளார்.

5) நகைகடன் வழங்குதல், அடமான நகைகளை பாதுகாத்தல், பாதுகாப்பு பெட்டக சாவியை கூட்டாக வைத்து பராமரித்தல் ஆகியவைகள் செயலர் திருமதி.டி.ஜெயந்தி மற்றும் முதுநிலை எழுத்தர்/காசாளர் திரு.என்.முருகன் ஆகிய இருவரின் கூட்டு பொறுப்பில் இருந்து வந்துள்ளது. நகை மதிப்பீட்டாளராக திரு.சி.சாமி ஆச்சாரி என்பவர் பணிபுரிந்து வந்துள்ளார். இதற்கு அத்தாச்சியாக மேல் தெரிவித்த 3 நகைகளுக்கான நகை கடன் பேரேட்டில் இவர்கள் மூவரும் கையொப்பம் இட்டுள்ளார்கள். நகைகடன் எண். 5566, 5951, 6006 ஆகிய மூன்று கடன்களுக்கான பற்று சீட்டில் முதுநிலை எழுத்தர் /காசாளர் எழுதி இவர் மற்றும் செயலர் திருமதி.டி.ஜெயந்தி இருவரும் அனுமதித்து கையொப்பம் இட்டுள்ளனர். நாள்வழி பேரேட்டினை முதுநிலை எழுத்தர்/காசாளர் எழுதி இவர் மற்றும் செயலர் திருமதி.டி.ஜெயந்தி இருவரும் அனுமதித்து கையொப்பம் இட்டுள்ளனர். கடன் வழங்கியதற்கு அத்தாச்சியாக நகை கடன்தாரர் திரு. பெரியதம்பி என்பவரிடம் கடன் விண்ணப்பம் பெறப்பட்டுள்ளது. இக்கையாடல் குறித்து செயலர் திருமதி.டி.ஜெயந்தி, முதுநிலை எழுத்தர்/காசாளர் திரு.என்.முருகன், நகை மதிப்பீட்டாளர் திரு.சி.சாமி ஆச்சாரி ஆகிய மூவரும் உண்மையான அடமான நகைகளை அபகரித்து அதற்கு ஈடாக போலி நகைகள் வைத்து உண்மையான நகைகளை கையாடல் செய்துள்ளதை ஒப்புக் கொள்கின்றனர். கடன்தாரர்கள் திருமதி.பத்மினி, திருமதி. ஜெயசித்ரா, திரு.பெரியதம்பி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பெறப்பட்டதில் இவர்கள் மூவரும் உண்மையான நகைகள் வைத்து கடன் பெற்றதாகவும், தொடர்புள்ள ஆவணங்களில் கையொப்பமிட்டுள்ளதையும், நகைகள் மீட்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார்கள். 09.10.2013 ம் தேதியில் சங்க தலைவர்.திரு.எஸ். கிருஷ்ணமூர்த்தி, சரக மேறபார்வையாளர் அரூர்–2 திரு.குப்புசாமி மற்றும் சங்க பணியாளர்கள் ஆகியோர்கள் முன்னிலையில் தருமபுரி மாவட்ட மத்திய கூட்டறவு வங்கி தீர்த்தமலை கிளை நகை மதிப்பீட்டாளர் திரு.ராம்குமாரை வைத்து சங்க பாதுகாப்பு பெட்டகத்தில் உள்ள அடமான நகைகளை 100 சதவிதம் இருப்பு பரிசோதனை செய்யப்பட்டது. இதில் கடன் எண்.5566 திருமதி.பதிமினி பெயரில் உள்ள நகைகளில் கட்டிங் மாடல் செயின்–2 ன் மொத்த எடை 57.600 கிராம் போலி நகைகள் என்றும், 4 முத்திரை காசுகள் மொத்த எடை 12.000 கிராம் உண்மையான நகைகள் என்றும் அறியப்பட்டது. மேலும், திருமதி.ஜெயசித்ரா, திரு.பெரியதம்பி ஆகியோரின் பெயரில் உள்ள நகைகள் போலியானவை என்றும் அறியப்பட்டது. இந்த போலி நகைகள் என்னால் கைபற்றப்பட்டது. இவ்வாறு கடன்தாரர்களிடம் பெறப்பட்ட உண்மையான நகைகளை அபகரித்து கு.இ.(1), கு.இ.(2), கு.இ(3) ஆகிய மூவரும் கூட்டாக கையாடல் செய்துள்ளார்கள்.

அபகரித்து கையாடல் செய்த உண்மையான அடமான நகைகளின் அன்றைய மார்க்கெட் மதிப்பு நகைகடன் பேரேட்டின்படி ரூ. 1,85,830/- ஆகும்.

**(அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/-இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.